வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேனி பழனி

தேதி 05.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடினுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே பல்வேறு உடன்பாடுகள் கையெழுத்தாயின.

கூட்டுறவுத் துறையை மேலும், மேலும் பரவலாக்க அரசு அயராது பாடுபட்டு வருவதாக, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

நுண்ணுட்டச்சத்து உரங்கள் மீதான ஜிஎஸ்டி குறைக்கப்பட்டதால், விவசாயிகளின் சாகுபடிச் செலவு, கணிசமான அளவில் குறைந்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா கூறியுள்ளார்.

ரிசர்வ் வங்கி, இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய காலக் கடன் மீதான ரெப்போ வட்டி விகிதத்தை, 5.25 சதவிகிதமாக குறைத்துள்ளது.

*மோடி-புடின் 1* (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அமைதி வழியில் மட்டுமே உலக நலனை உறுதிப்படுத்த முடியும் என்றும், அமைதிக்கு ஆதரவான பக்கத்தில் தான் இந்தியா நிற்கும் என்றும், இந்த சந்திப்பின் போது பிரதமர் கூறினார். உக்ரைன் நெருக்கடிக்கு பின்னரும், இந்தியாவிற்கும், ரஷ்யாவிற்கும் இடையே, தொடர்ச்சியான தொடர்புகள் நிலவி வருவதாகவும், இது நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர

நம்பிக்கைக்கு இதுவே சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். சந்திப்பு குறித்து கூடுதல் விவரங்கள்…….

வாய்ஸ்)

*மோடி-புடின் 2* (17)

(வாய்ஸ்)

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், ரஷ்ய அதிபருக்கும் இடையிலான சந்திப்பை தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே, பாதுகாப்பு, வர்த்தகம், கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், ஊடகம் உள்ளிட்ட துறைகளில் பல்வேறு உடன்பாடுகள் கையெழுத்தாயின. 2030 ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பிற்கான முக்கிய துறைகளை மேம்படுத்த, திட்டம் ஒன்றும், இந்த சந்திப்பின் போது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பின்னர் இரு தலைவர்களும் இணைந்து, கூட்டு செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், இந்தோ-ரஷ்யா உறவுகள், வரலாற்று ரீதியிலான புதிய மைல் கற்களை எட்டி வரும் தருணத்தில், ரஷ்ய அதிபர் இந்தியாவிற்கு வந்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். இரு நாடுகளும், யூரியா உற்பத்தியில் நெருக்காக ஒத்துழைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக, ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடினுக்கு, இன்று காலை புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவர் ராஜ்காட்டில், மகாத்மாகாந்தி சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தினார். இன்று மாலை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, ரஷ்ய அதிபர் திரு புடினுக்கு விருந்து அளிக்கிறார்.

*கிரண் ரிஜூஜூ* (16)

திருப்பரங்குன்றம் மலைஉச்சியில் தீபம் ஏற்றும் பிரச்சனையை திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மக்களவையில் எழுப்பியதால் ஏற்பட்ட அமளி காரணமாக, அவையின் அலுவல்கள், நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன. நீதிமன்ற விசாரணையில் உள்ள

இப்பிரச்சனையை, திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் நாடாளுமன்றத்தில் எழுப்புவதன் மூலம் தவறான முன் உதாரணத்தை ஏற்படுத்துவதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு பின்னர் பூஜ்ய நேரத்தில் பேசுகையில் கூறினார். நீதித்துறை மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி மீது சந்தேகம் ஏற்படுத்தவே இவர்கள் முயலுவதாகவும், அரசு இதை மிகத் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முன்னதாக, தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், இடையிட்டுப் பேசுகையில், திமுக அரசு இப்பிரச்சனையை மாநில சட்டமன்றத்தில் எழுப்ப வேண்டுமே தவிர, நாடாளுமன்றத்தில் எழுப்பி, அரசியல் ஆக்க கூடாது என்றார். திருப்பரங்குன்றம் பிரச்சனை தொடர்பாக இன்று மாநிலங்களவையிலும், திமுக மற்றும் இதர எதிர்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

*அமித் ஷா* 1 (18)

கூட்டுறவுத் துறையை மேலும், மேலும் பரவலாக்க அரசு அயராது பாடுபட்டு வருவதாக, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார். நபார்டு வங்கி மற்றும் இந்திய மொபைல் உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில், காந்தி நகரில் இன்று நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், விரைவிலேயே, கூட்டுறவுக் காப்பீடு, கூட்டுறவு வாடகை கார் உள்ளிட்ட வசதிகளும், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு இடையே கூட்டுறவை மேம்படுத்த, புதிய திட்டமும், கொண்டு வரப்படும் என்றார். ஊடகப் பொருளாதாரத்தை வலுப்படுத்தாமல், முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் கனவை எட்ட முடியாது என்றும், கூட்டுறவு துறை வளர்ச்சி பெற்றால், கிராமப்புற மற்றும் வேளாண் வளர்ச்சி தானாகவே உருவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கூட்டுறவு துறையின் பங்களிப்பை, வரவிருக்கும் ஆண்டுகளில் 3 மடங்காக உயர்த்தும் இலக்குடன் அரசு செயல்பட்டு

வருவதாக திரு அமித் ஷா தெரிவித்தார். ஊரக கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்தும் வகையிலான நபார்டு வங்கியின் சஹாகார் சாரதி திட்டத்தையும், சஹாகார் சேது, அபியான் சாத்தி உள்ளிட்ட திட்டங்களையும் விழாவின் போது அமைச்சர் தொடக்கி வைத்தார். முன்னதாக, அகமதாபாத்தில் சுதேச உற்சவத்தையும்,

*அமித் ஷா* 2 (5)

பின்னர் காந்தி நகர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில்,புதிய ரயில்வே மேம்பாலம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளையும் அவர் தொடங்கி வைத்தார். இன்று மாலை அகமதாபாத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் விளையாட்டு விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டு, அகமதாபாத் ஷாப்பிங் திருவிழாவையும் தொடக்கி வைக்கிறார்.

*முர்மு விருது* (10)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வரும் 9 ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெற உள்ள விழாவில், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான கைவினை விருதுகளை வழங்கி சிறப்பிக்கிறார். தேசிய கைவினை வார கொண்டாட்டங்கின் ஒரு பகுதியாக, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழாவில், மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங், இணை அமைச்சர் திரு பபித்ரா மார்கரிட்டா ஆகியோரும் பங்கேற்க உள்ளனர். நாட்டின் வளமான, பலதரப்பட்ட கைவினை மரபுகளை, பேணிப் பாதுகாத்து ஊக்குவிப்பதில், அரசுக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், இவ்விழா அமைவதாக, ஜவுளித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ஜிஎஸ்டி வேளாண்மை* (11)

நுண்ணுட்டச்சத்து உரங்கள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டதால், விவசாயிகளின் சாகுபடி செலவு குறைந்து, கணிசமாக நிதி நிவாரணம் கிடைத்திருப்பதாக மத்திய ரசாயண மற்றும் உரத்துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா கூறியுள்ளார். இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதை தெரிவித்த அவர், குறிப்பாக சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகள் இதனால் பயன்பெறுவதாக கூறினார். ஜிஎஸ்டி குறைக்கப்பட்டதால், 1 ஏக்கர் நெல்லுக்கான சாகுபடி செலவு, 140 ரூபாய் அளவிற்கும், 1 ஏக்கர் கரும்புக்கான சாகுபடி செலவு, 199 ரூபாய் அளவிற்கும், 1 ஏக்கர் கோதுமைக்கான சாகுபடி செலவு, 146 ரூபாய் அளவிற்கும் குறைந்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

*ரிசர்வ் வங்கி* (10)

ரிசர்வ் வங்கி, இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன் மீதான ரெப்போ வட்டி விகிதத்தை, 5.25 சதவிகிதமாக, 25 சதவிகித புள்ளிகள் குறைத்துள்ளது. பணக் கொள்கை பற்றிய ரிசர்வ் வங்கியின் 6 உறுப்பினர் குழுவின் கூட்டத்தில், இதற்கான முடிவு ஒரு மனதாக மேற்கொள்ளப்பட்டது. ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார் . நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றிய ரிசர்வ் வங்கியின் கணிப்பு, 6.8 லிருந்து, 7.3 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளதாகவும், சில்லறை விலை பண வீக்கம் பற்றிய கணிப்பு, 2.6 லிருந்து, 2 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜெயலலிதா (8)

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நினைவு நாளான இன்று புதுச்சேரியில், நகராட்சி அரங்கில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருஉருவ படத்திற்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி, மலரஞ்சலி செலுத்தினார். பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, அரசு கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் சரவணன் குமார், திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி உட்பட பலரும் ஜெயலலிதா படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

S-I-R (5)

S-I-R கணக்கெடுப்பு படிவங்களை வாக்காளர்கள் ஆன்லைன் மூலம் நிரப்பி சமர்ப்பிக்க தேவையான வசதிகளை தேர்தல் ஆணையம் வழங்கி வருகிறது. இந்த ஆன் லைன் வசதியை தான் பயன்படுத்திக் கொண்டது குறித்தும், இதை மற்றவர்களும் எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறித்தும் எடுத்துக் கூறுகிறார், புதுச்சேரியை சேர்ந்த கல்லூரி மாணவி பவதாரினி.........

(வாய்ஸ்-பவதாரினி)

வீட்டு வரி (7)

உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து வார்டுகளை சேர்ந்த வீட்டு வரி மற்றும் சொத்து வரி நிலுவைதாரர்கள், வரி செலுத்துவதற்கு ஏதுவாக, தட்டாஞ்சாவடி விவிபி நகரில் உள்ள வீட்டு வரி வசூல் மையம், வரும் மார்ச் மாதம் வரை அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும், காலை – மதியம் இரு வேளையும் செயல்படும் என நகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது. புதுச்சேரி அரசின் Lgrams இணையதளம் மூலமாகவும், வீட்டு வரி-சொத்துவரி செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*வானிலை* (10)

தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நெல்லை மாவட்டம் மலை பகுதிகள், மற்றும், தென்காசி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 11 ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, திருவள்ளுர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் 9 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 1 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*மகளிர் உதவி* (11)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் துயரத்தில் உள்ள பெண்களுக்கு தேவையான சட்ட உதவி உட்பட எல்லா உதவிகளையும், ஒருங்கிணைந்து வழங்குவதற்கான, ஒன்-ஸ்டாப் மையங்கள், நாடு முழுவதும் 864 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மருத்துவ உதவி, தற்காலிக தங்கும் இடம், மற்றும், மனநல ஆலேசனைகளும் இம்மையங்களில் பெண்களுக்கு வழங்கப்படுவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை இணையமைச்சர் திருமதி சாவித்திரி தாக்கூர் இன்று மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். 2015 ஆம் ஆண்டில், இத்திட்டம் தொடக்கப்பட்டது முதல் இதுவரை, மொத்தம் சுமார் 12.67 லட்சம் பெண்கள் பயன்பெற்றுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

ரயில்வே (9)

நாட்டில் ரயில் விபத்துக்களின் எண்ணிக்கை 90 சதவிகிதம் குறைந்திருப்பதாக, ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று மாநிலங்களவையில் கூறினார். முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கவச் தானியங்கி வசதி உள்பட, ரயில்களின் பாதுகாப்பிற்கான பல்வேறு வசதிகளை அரசு அமல்படுத்தி இருப்பதே இதற்கு காரணம் என்று, அவையில், கேள்வி நேரத்தின் போது அவர் கூறினார். நாடு முழுவதும் தினசரி சுமார் 25 ஆயிரம் ரயில்கள் இயக்கப்படுவதாகவும், இதில், 80 சதவிகித ரயில்கள் குறித்த நேரத்தில் ஓடுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கர்நாடக இசை (13)

மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் சார்பில், கிருஷ்ணவேணி சங்கீத நீராஜனம் என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 3 ஆம் ஆண்டு கர்நாடக இசை விழா, விஜயவாடாவில் நாளை தொடங்க உள்ளது. தெலுங்கு இசை மரபுகளின் செழுமையை கொண்டாடுதல் என்ற மைய கருத்து அடிப்படையில் நடைபெற உள்ள இந்த 2 நாள் விழாவில், 98 கலைஞர்களின் பங்கேற்புடன், மொத்தம் 18 கர்நாடக இசை நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன. விழாவின் மற்றொரு பகுதியாக, ஆந்திர மாநிலத்தில் புவி குறியீடு பெற்ற பாரம்பரிய பொருட்களின் கண்காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இசை கலைஞர்கள், கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்களின் நலன்களை மேம்படுத்தி, சங்கீத சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையிலான இந்த இசை விழாவினால், நாட்டின் முக்கிய கர்நாடக இசை கேந்திரமாக விஜயவாடா மேம்படவும் உதவிகரமாக இருக்கும் என அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.